மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: தமிழ் மொழி

வாரம் - 7

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியர் R.யசந்தன்
கே/ உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

## பகுதி - 1

**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. ‘எந்தையும் உடையேம் எம் குன்றும்.....’ இங்கு எந்தை என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. எம்தாய் II. எம்தந்தை III. எம்தமையன் IV. எம்மனைவி

2. ‘அரளிப்பூத்தண்டாலே அத்தை அடிச்சகதை’ இங்கு அத்தை என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. மாமி II. மச்சாள் III. அக்காள் IV. அம்மை

3. ‘இதோ நாம் விளையாடிய மரப்பாச்சிகள்......’ இங்கு மரப்பாச்சி என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. மரக்குற்றி II. வண்டி III. புல்லாங்குழல் IV. பொம்மை

4. ‘பெண்கள் மலை முகட்டிலிருந்து........’ இங்கு முகடு என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. தொடர் II. அடிவாரம் III. உச்சி IV. மடு

5. ‘வம்பவேந்தர்களின் வன்முறை அவர்களைத் துரத்தியது.’ இங்கு வம்பவேந்தர் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. நல்ல அரசர்கள் II. பெரும் அரசர்கள் III. குள்ள அரசர்கள் IV. கொடியஅரசர்கள்

## பகுதி - 2

**சுருக்கமான விடை தருக.**

1. ‘மலைநாட்டுப் பகுதியினை ஆண்ட மன்னன் சிறந்த கொடை வள்ளல்’
   I. இங்கு இடம் பெறும் மன்னனின் நாமம் என்ன?
   II. அவன் ஆட்சி செய்த இடம் எது?

2. ‘இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலாவில் வென்று எறி முரசின் வேந்தர்’
   I. “இற்றைத் திங்கள்” என்பதன் பொருள் என்ன?
   II. ‘முரசின் வேந்தர்’ எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

3. “அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலாவில் எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொள்ளார்”
   I. ‘எந்தை’ என்பதன் பொருள் யாது? அது யாரைக் குறிக்கிறது?
   II. ‘எம்குன்று’ என்பதனால் குறிக்கப்படும் இடம் யாது?

4. “அரளிப்பூத்தண்டாலே அத்தை அடிச்ச கதை”
   I. இப்பாடலில் இடம் பெறும் நாட்டார் பாடலின் வகை என்ன?
   II. ‘அத்தை’ என்ற உறவுப் பெயரின் திருத்தமான வடிவம் என்ன?

5. “ஆம் புறப்படவேண்டியது தான்”
   I. இக்கூற்றை கூறியவர் யார்?
   II. யாருக்கு கூறினார்?